முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விகாரி சித்திரை மாதம் 8ம் திகதி முதல் விகாரி சித்திரை மாதம் 15ம் திகதி வரை ஏப்ரல் 21ம் திகதி முதல் ஏப்ரல் 28ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **தரும சக்தியே அரங்கா வாழ்க**
   **தரணி காத்திடும் அரசா வாழ்க**
   **பெருமைமிகு பாரதம் தமிழகத்தில்**
   **புகலுவேன் விகாரி தகர் திங்களில்**

2. **திங்களில் அட்டமதிகதி மேல் மூவை திகதிக்குள்**
   **(விகாரி வருடம் சித்திரை மாதம் 8ம் நாள் 21.04.2019, ஞாயிறு முதல் சித்திரை மாதம் 15ம் நாள் 28.04.2019, ஞாயிறு முடிய)**
   **தெரிவிப்பேன் வார நிகழ்வாக எதிர்கால பலனை**
   **ஓங்காரன் சுப்பிரமணியர் யானும் அருளுவேன்**
   **ஓதிடுவேன் மத்தியும் மாநிலம் தானும்**

3. **தன் செயல்பாடு வழி தேர்தல் களத்தில்**
   **தவிப்பும் மக்களிடை எதிர்ப்பும்**
   **நன்மைபடா கண்டு வர நேரும்**
   **ஞானமாக தருமப்படி செயல்பாடு**

4. **செயல்பாடு கருதா இனம் வழி**
   **சேவைக்கு வந்த தலைமைகளும்**
   **தயவில்லாத சமத்துவம் இல்லாத**
   **தங்கள் போக்கால் மக்களிடை**

5. **மக்களிடை எதிர்மறை விமர்சனம்**
   **மறுப்பும் கண்டு மயங்க நேரும்**
   **ஆக்கமான அறிவுப்பூர்வமான**
   **ஆளுமையை அடைய உண்டான**

6. **உண்டான தெளிவை பெற்று**
   **உயர்நிலை மக்கள் தேறி வர**
   **தொண்டு மனப்பான்மை இல்லா**
   **தேசம் பிரிக்கும் சாதி இனம் பிரிக்கும்**

7. பிரிக்கும் ஆளுமை விரும்புவோர்
பின்னடைவே காண நேரும்
உரிமைக்கும் மக்கள் உணர்விற்கும்
உண்மை பக்திக்கும் மதிப்பளிக்கும்

8. மதிப்பளிக்கா தலைமைகளும் கூட
மக்களிடை மதிப்பிழந்து போக நேரும்
மதிப்புமிக்க தங்களின் வாக்கின் பலம்
மக்களெல்லாம் உணர்ந்து இருப்பதாலே

9. ஆகவே உண்மையான ஆட்சி
ஆக்கபூர்வ செயல் கொண்ட ஆட்சி
யுகம் யுகமாய் நிலைக்கும் திட்டம் கூறி
உண்மைபட இயங்கும் நோக்கில்

10. நோக்கில் மக்களை அணுகுபவர்க்கே
நிர்வாகம் பதவி ஆளுமை வாய்க்கும்
தேக்கமில்லா அரங்கஞானி செய்யும்
தருமபலம் ஏற்று வர ஞானஆட்சி பிறக்கும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விகாரி வருடம் சித்திரை மாதம் 8ம் நாள் 21.04.2019, ஞாயிறு முதல் விகாரி சித்திரை மாதம் 15ம் நாள் 28.04.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

தர்மங்கள் அளவிலாது செய்து தர்மத்தின் சக்தியாக விளங்கி நிற்கும் அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. இவ்வுலகை தாம் செய்யும் தர்மத்தினாலும் தமது தவபலத்தாலும் காக்கின்ற ஞான அரசனே அரங்கா வாழ்க வாழ்க. பெருமைமிக்க பாரத தேசத்திலும், தமிழகத்திலும் விகாரி வருடம் சித்திரை 8ம் நாள் 21.04.2019, ஞாயிறு முதல் சித்திரை 15ம் நாள் 28.04.2019, ஞாயிறு முடிய உள்ள காலங்களிலே நடக்க இருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

மத்திய அரசும், மாநில அரசும் தங்களது செயல்பாடுகளினாலே தேர்தல் களத்தினிலே தவிக்கின்ற நிலையும் மக்களின் எதிர்ப்பையும், நன்மைகளற்ற செயல்பாடுகளையும் கண்டுவர நேரிடும்.

மத்தியையும், மாநிலத்தையும் ஆட்சி செய்கின்றவர்களும், கட்சித் தலைவர்களும் தர்மத்தின் வழி நடக்காமல் போனதாலும், செயல்பாடுகளை முக்கியமாக கருதாமல் இன பாகுபாடுகளை கருத்தில் வைத்து இனத்தின் மூலம் சேவைக்கு வந்துவிட்ட சாதி கட்சி தலைவர்களும் மக்கள் மீது தயவு கொள்ளாமல் மக்களிடையே சமத்துவமாக நடந்து கொள்ளாமல் போனதால் எதிர்மறையான செயல்பாடுகளும், விமர்சனங்களும், மறுப்புகளையும் கண்டு தடுமாறிட நேரிடும்.

ஆக்கமும் அறிவும் உடைய தலைமையை தேர்ந்தெடுக்கின்ற தெளிவினை மக்கள் பெற்று உயர்நிலையை அடைந்து, மக்கள் தெளிவான முடிவினை தேர்ச்சி பெற்று உள்ளனர். ஆனால் தொண்டுள்ளம் இல்லாமலும், சமநோக்கு மனப்பான்மை இல்லாமலும் தேசத்தை பிரித்து துண்டாடும் விதமான சாதி, இனம் பிரிக்கும் சூழ்ச்சி செய்து ஆட்சிப் பொறுப்பினை அடைய விரும்புகின்றவர்கள், பதவிகளை அடைய விரும்புகின்றவர்கள் எல்லாம் தேர்தல் களத்திலே பின்னடைவை காண நேரிடும். உரிமைக்கும் மக்களின் உணர்வுகளுக்கும், உண்மை பக்திக்கும் மதிப்பு அளிக்காமல் போன தலைமைகளும் கூட மக்களிடையே மதிப்பிழந்து போகிட நேரும்.

மதிப்புமிக்க தங்களின் வாக்குகளின் பலத்தினை மக்கள் எல்லாம் தெளிவாக உணர்ந்து இருப்பதாலே உண்மையான ஆட்சி ஆக்கப்பூர்வ செயல்பாடுகளைக் கொண்ட ஆட்சி, பன்னெடுங்காலம் பன்னெடுங் காலம் நிலைத்து பலனளிக்கும் திட்டங்களை உண்மைபட தந்து செயல்படுத்தும் விதமாக, மக்களை அணுகுபவர்களுக்கே ஆட்சிப் பொறுப்பும், நிர்வாகமும், பதவிகளை வகிக்கும் வாய்ப்பும் கிடைத்திடும்.

தடையின்றி தர்மங்கள் செய்திடும் வள்ளல் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தர்மபலத்தினை ஏற்று தர்மத்தின்படி நடந்து வர, உலகினில் ஞான ஆட்சி பிறந்திடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

—சுபம்—